# சங்ககிரி நகராட்சி ஆணையாளரின் செயல்முறை

ஆணை பிறப்பிப்பவர் : திரு.செ.கோபிநாத் பி.காம்.,

---

ந.க.எண். 038/2026/எப்1 நாள் :30.03.2026

பொருள் : மணைப்பிரிவு – சங்ககிரி நகராட்சி – சங்ககிரி வருவாய் கிராமம் – சர்வே எண்கள்.19/1B1A2A1B, 19–1B1A3B, 19/4B, 19/5B–இல் 1.5513 ஏக்கர் (அ) 6278 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய மனைப்பிரிவு அமைத்தல் – நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. திரு.ந.தேவராஜ் மற்றும் ஐந்து நபர்கள் கதவு எண்.3.3.25/15பி, எஸ்.கே.நகர், சங்ககிரி என்பவரின் விண்ணப்பம் நாள்.06.01.2026.
2. சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.SLM/HDV8EW2R/47050/2025/2025/TCP நாள்.28.07.2025.
3. சங்ககிரி சார்பதிவாளர் பத்திர பதிவு எண்.2894/2025 நாள்.16.07.2025.
4. சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.SWP/DTDP/SALEM/LAYOUT No.245/2025.
5. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நவ–4(3) நாள்.04.05.2017.
6. சங்ககிரி நகராட்சி கருவூல பற்றுச் சீட்டு எண். 197/01/01/25–26/0006228 மற்றும் 197/01/01/25–26/0006229 நாள். 06.03.2026
7. இ.சலான் எண். 20260307002716 நாள்.07.03.2026
8. நகர்மன்ற தீர்மான எண்.149, நாள்.27.02.2026.
9. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி–2, நாள்.20.10.2022
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019
11. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.09.12.2020
12. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.16.07.2022

-------

**உத்தரவு:**

சங்ககிரி நகராட்சி எல்லைக்குட்பட்ட சங்ககிரி வருவாய் கிராமம், சர்வே எண்கள்.19/1B1A2A1B, 19–1B1A3B, 19/4B, 19/5B–இல் 1.5513 ஏக்கர் (அ) 6278 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி பார்வை 1–இல் காணும் திரு.ந.தேவராஜ் மற்றும் ஐந்து நபர்கள் ஆகியோரின் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 2–இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் கடிதத்தில்

தெரிவித்துள்ளபடி, உத்தேச மனைப்பிரிவிற்குரிய பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் பார்வை 3-இல் கண்டுள்ள சங்ககிரி சார்பதிவாளர் அலுவலக ஆவணம் மூலம் சங்ககிரி நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 4-இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/SALEM/LAYOUT No.245/2025 என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 5-இல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி நிலப் பயன்பாடு மாற்றம் செய்வதற்கான உரிய கட்டணம் மற்றும் இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்க்கண்ட விபரப்படி பார்வை 6-இல் கண்டுள்ள செலுத்துச்சீட்டின் படி நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 7இல் கண்டுள்ள இ-சலான்படி நிலப்பயன்பாட்டு மாற்றுக் கட்டணம் அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

சங்ககிரி வருவாய் கிராமம், சர்வே எண்கள்.19/1B1A2A1B, 19-1B1A3B, 19/4B, 19/5B-இல் 1.5513 ஏக்கர் (அ) 6278 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைக்ளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 8-இல் கண்டுள்ள இந்நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே சங்ககிரி வருவாய் கிராமம், சர்வே எண்கள்.19/1B1A2A1B, 19-1B1A3B, 19/4B, 19/5B-இல் 1.5513 ஏக்கர் (அ) 6278 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 9-இல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் கண்டுள்ள வழிகாட்டு நடைமுறைகள் மற்றும் பார்வை 10, 11 மற்றும் 12-இல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ளபடி சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர் (மு.கூ.பொ),
சங்ககிரி நகராட்சி.

30/03/2026

இணைப்பு :

1. பார்வை 4-இல் கண்டுள்ள செயல்முறை உத்தரவு நகல் மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.
2. பார்வை 5,10,11 மற்றும் 12-இல் காணும் அரசாணைகள்.

பெறுதல்

திரு.ந.தேவராஜ் மற்றும் ஐந்து நபர்கள்,
கதவு எண்.3.3.25/15பி,
எஸ்.கே.நகர், சங்ககிரி,
சேலம் – 637301.

நகல்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலம், சேலம் மாவட்டம்.
2. நகராட்சி பொறியாளர், சங்ககிரி நகராட்சி (வரைபட நகல் மற்றும் தான சாசன நகலுடன்) மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலையினை சொத்துப்பதிவேடு மற்றும் சாலைகள் பராமரிப்பு பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. நகரமைப்பு ஆய்வாளர், சங்ககிரி நகராட்சி பொது திறவிடம் ஒதுக்கீடு விபரத்தினை சொத்துகள் பதிவேட்டில் பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.
4. சார்பதிவாளர், சங்ககிரி (வரைபட நகலுடன்) அவர்களுக்கு தகவலுக்காக.

**D.Dis.No.** 088/2026/F1

**Dated** 30.03.2026

**APPROVED**

Subject to the conditions laid down in the proceedings enclosed

COMMISSIONER

Sankagiri Municipality




**APPROVAL NO: SWP/DTCP/SALEM LAYOUT NO : 245/2025**